# எங்கள் ப்ளாக் :: நிலா :: 001

திங்கள் மே 18, 2020.

## பிஸி பேளா பாத் :: ரமா ஸ்ரீனிவாசன் ரெஸிப்பி

**அச்சம் தரும் சூழ்நிலையிலிருந்து விடுபட்டு, ஒரு நல்ல உணவைத் தயாரித்து நாமும் உண்டு, நம் குடும்பத்தாருக்கும் அளிப்போம் என்று முடிவு செய்து நான் பிஸி பேளா பாத் தயாரித்தேன். அதற்கு கூட உண்ண வறுவல் இல்லாததால், அப்பளம் பொரித்து சமாளித்தேன்.**

**உண்மையிலேயே சுவையாக இருந்தது. அது கோவிட் படுத்தும் பாட்டினாலோ அல்லது பொழுது போகாமல் இருப்பதாலோ தெரியவில்லை. எல்லோருமே நன்றாக உள்ளதாக கூறினார்கள்.**

**நீங்களும் சமைத்துப் பாருங்கள்.**

**வேண்டிய பொருட்கள் :**

**மசாலா விழுதிற்கு :**

**1 ஸ்பூன் எண்ணை (நான் நல்லெண்ணை உபயோகித்தேன்)**

**1 ஸ்பூன் தனியா**

**½ ஸ்பூன் உ.பருப்பு**

**½ ஸ்பூன் க.பருப்பு**

**5 கேஷ்மீர் சிவப்பு மிளகாய் (நிறத்திற்காக) நான் வெறும் மிளகாய்தான் சேர்த்துக் கொண்டேன்.**

**¼ ஸ்பூன் வெந்தயம்**

**சில கருவேப்பிலை இலைகள்**

**2 ஸ்பூன், திருகிய தேங்காய்**



சிறிது நீர் விழுது அரைப்பதற்கு



சாம்பார் சாதம் அல்லது பிசி பேளா பாத்திற்கு :

2 ஸ்பூன் நெய் அல்லது வெண்ணை

½ ஸ்பூன் கடுகு

½ ஸ்பூன் ஜீரகம்

ஒரு சிட்டிகை பெருங்காயம்

சில கருவேப்பிலை இலைகள்

1 காய்ந்த மிளகாய்

½ வெங்காயம்

½ நன்றாக சிறிதாக வெட்டிய தக்காளி

நீளமாக சிறு துண்டுகளாக வெட்டிய 1 கேரட்

5 பீன்ஸ் நீளமாக வெட்டியவை

1 வெட்டிய முறுங்கைக் காய்



1 கப் நீர் அல்லது உங்களுக்கு வேண்டியபடி

½ ஸ்பூன் மஞ்சள் பொடி

சுவைக்கேற்ப உப்பு

1 பெரிய நெல்லிக்காய் அளவு புளி (நீரில் ஊற வைக்க வேண்டும்)

½ ஸ்பூன் வெல்லம்

இரண்டு கப் வேக வைத்த சாதம் (பொல பொலவென இருக்க வேண்டும்)

½ கப் வேக வைத்த துவரம்பருப்பு

செய்முறை :

1. முதலில் வானலியை நன்றாக சூடாக்கி, எண்ணை சேர்த்து, மசாலா விழுதிற்கான எல்லா பொருட்களையும் நன்றாக வறுத்துக் கொள்ளவும்.

2. வேண்டிய தண்ணீர் விட்டு, மிக்ஸியில் நன்றாக விழுதாக அரைத்துக் கொள்ளவும்.

3. அடுத்தது, ஒரு வானலியில் 2 ஸ்பூன் நெய்யை விட்டு தாளிக்க வேண்டிய பொருட்களை தாளித்துக் கொள்ளவும்.

4. இப்போது, வெட்டிய வெங்காயத்தை போட்டு நன்றாக பொன்னிறமாகும் வரை வதக்கவும்.

5. பிறகு வெட்டி வைத்த தக்காளியை சேர்த்து வதக்கவும்.

6. இப்போது வெட்டி வைத்திருக்கும் காய்கள், நீர், மஞ்சள் பொடி மற்றும் உப்பை கலந்து விடவும்.

7. வானலியை ஒரு மூடி போட்டு மூடி, இக்கலவையை நன்றாக 5 நிமிடங்கள் கொதிக்க விடவும்.

8. இப்போது, ஊற வைத்த புளி நீர் மற்றும் வெல்லத்தையும் சேர்த்து நன்றாக கொதிக்க விடவும்.



9. கொதித்த பின்னர், அரைத்து வைத்த மசாலா விழுது, வேக வைத்த துவரம்பருப்பு, சாதம் யாவற்றையும் வாணலியில் சேர்த்து கலக்கவும்.



10. எல்லாவற்றையும் நன்றாக கலந்து, தேவைக்கேற்றார் போல் நீர் சேர்த்துக் கொள்ளவும்.

11. 5 நிமிடங்கள் குறைந்த நெருப்பில் வைத்து கொதிக்க விடவும். பிஸி பேளா பாத் சிறிது இருகும்.

12. இறக்கி கீழே வைத்து, மேலே சிறிது நெய் ஊற்றி அப்பளத்துடனோ, உருளை வறுவலுடனோ பரிமாருங்கள்.

எங்கள் வீட்டில் பெரியவர்கள் உள்ளதால், நான் வெங்காயம், முருங்கைக் காய் சேர்க்காமல் செய்தேன். மிக அருமையாக வந்தது. சமைத்து சுவையுங்கள்.

===================================

செவ்வாய், 19 மே, 2020

# கேட்டு வாங்கிப் போடும் கதை : தீமாட்டிக் கல்யாண வைபோகமே! - பானுமதி வெங்கடேஸ்வரன்

### தீமாட்டிக் கல்யாண வைபோகமே!



## பானுமதி வெங்கடேஸ்வரன்

சாரு அந்த கல்யாண பத்திரிகையை கொண்டு வந்த ஜோரிலேயே அது அவளுக்கு வேண்டப்பட்டவர்கள் வீட்டு கல்யாணம் என்று புரிந்து கொண்டேன்.

"இந்த இன்விடேஷனை பார்த்தீர்களா?"

"என் கையில் தந்தால்தானே பார்க்க முடியும்.."

அவள் கொடுத்த பத்திரிகையை பிரித்தேன். அதில் குறிப்பிட்டிருந்த பெயர்கள் எதுவும் எனக்கு பரிச்சயமான தில்லை.

"யாரு?"

"எங்க கடைசி அத்தையோட, ரெண்டாவது பெண்ணின்
பெண்ணுக்கு கல்யாணமாம்.

ராஜி அத்தை பேத்தியா?

ராஜி அத்தை இல்ல, சக்கு அத்தை.

அப்படி ஒரு அத்தை இருப்பதே எனக்கு இப்போதுதான் தெரிகிறது. சக்கு அத்தையா? எனக்கு தெரிஞ்சு உனக்கு மூணு அத்தைதான். பிரேமா அத்தை, ஜமுனா அத்தை, ராஜி அத்தை. சக்கு அத்தை யார்?

"எங்க அப்பாவின் பெரியப்பா பெண். நம்ம கல்யாணத்துக்கு கூட வந்திருந்தா."

பதினைந்து வருடங்களுக்கு முன் கை குலுக்கிய, எத்தனையோ பேர்களில் சக்கு அத்தை யார் என்று என்னால் நினைவு கூற முடியவில்லை.

"கல்யாணம் எங்க?"

"ரெசார்ட்டுல"

"ரெசார்ட்டுலயா? எங்க? ஓ.எம்.ஆரிலா?" எனக்கு பகீரென்றது.
கே.கே.நகரிலிருந்து ஓ.எம்.ஆருக்கு ஒலாவோ, ஊபரோ போக வர ஆயிரம் பழுத்து விடும். அதைத் தவிர மொய்..நான் மனதிற்குள் கணக்கு போட, சாரு குரலில் பெருமை வழிய பத்திரிகையை புரட்டியபடி சொன்னாள். அந்த பத்திரிகையே ஒரு புத்தகம் போல இருந்தது.

"என்னிக்கி கல்யாணம்?"

"20ம் தேதி. சண்டே."

"நல்லதாப் போச்சு. டிராபிக் கம்மியா இருக்கும். காலங்கார்த்தால கிளம்பினா சீக்கிரம் போய்டலாம்."

பத்திரிகையை படித்து முடித்த சாரு," நாலு நாள் கல்யாணம்" என்றாள்.

"நாலு நாளா? நாலு நாள் ஔபாசனமா?"

"ஔபாசனமும் இல்ல, சொட்டு நீர் பாசனமும் இல்ல, முதல் நாள் மெஹந்தி,.."

"அப்படீன்னா?"

"மெஹந்தினா மருதாணி,"

"மருதாணி கல்யாண பெண் இட்டுக்கப் போறா.. "

"நீங்க எந்த காலத்துல இருக்கீங்க? இப்போ எல்லாம் ரிலேட்டிவ்ஸ், ஃபிரெண்ட்ஸ்னு எல்லோருக்கும் மருதாணி இட்டு விடறாங்க".

"ஓஹோ!"

"அடுத்த நாள் சங்கீத் அண்ட் ரிசப்ஷன்."

இதற்கு நான் சாருவிடம் விளக்கம் கேட்கவில்லை. நம் ஊர் திருமணங்களில் புகுந்து விட்ட ஏதோ வட இந்திய வழக்கம் என்பது புரிந்தது.

"அடுத்த நாள் கல்யாணம்,"

"அதற்கு அடுத்த நாள் கட்டுசாத கூடை."

"எல்லா நாட்களும் போக முடியாது.." என்று நான் சொல்ல நினைத்ததை சொல்ல விடாமல் சாரு முந்திக் கொண்டு ,"அட! தீமாட்டிக் கல்யாணம், அதனால எல்லா நாட்களுக்கும் டிரஸ் கோட் போட்டிருக்காங்க.

இப்போது கல்யாணங்களில் பல புதுமைகள் புகுந்து விட்டது எனக்குத் தெரியும். ஆனாலும் தீமாட்டிக் மேரேஜ் என்றால் என்ன என்று புரியவில்லை. வேறு வழியில்லை. சாருவிடம் கேட்டுதான் தீர வேண்டும்.

"இதென்ன புதுசா இருக்கு.. தீமாட்டிக் மேரேஜ்..?"
"ஒவ்வொரு நாளுக்கும் ஒரு தீம் எடுத்துக் கொண்டு அதன்படி கல்யாண மண்டப அலங்காரம், மணமக்களின் டிரஸ் எல்லாம் இருக்கும். வருகிறவர்களும் அதற்கேற்றார்போல் டிரஸ் பண்ணிக்க கொண்டு வர வேண்டும். இவங்க சங்கீத் அன்னிக்கு பீக்காக் என்று தீம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அன்னிக்கு அந்த ஹால் முழுவதும் மயில் வண்ணத்தில் அலங்காரம் செய்திருப்பார்கள். மணமக்கள் உட்காரும் நாற்காலி மயில் போல் இருக்கும். "

எனக்குத் தெரிந்து ஷாஜஹான்தான் மயிலாசனத்தில் அமர்ந்து கொண்டான் என்று சரித்திரத்தில் படித்திருக்கிறேன். ஆனால் குறுக்கே கேள்வி கேட்டு சாருவின் கோபத்திற்கு ஆளாக விரும்பாததால் பேசாமல் இருந்தேன். எனவே சாரு தன் பிரதாபத்தை தொடர்ந்தாள்.

'ஸோ, சங்கீத்திற்கு வருபவர்கள் எல்லோரும் மயில் வண்ணத்தில் உடை அணிந்து கொண்டு வர வேண்டும்."

ஒரு திருமணம் என்றால் எல்லோரும் விதம் விதமாக உடை அணிந்து கொண்டால்தான் பார்க்க நன்றாக இருக்கும்? இது யூனி ஃபார்ம் மாதிரி ஆகி விடாதா?

நீலம் என்றால் அதில் எவ்வளவு ஷேட்ஸ் இருக்கு? எல்லோரும் ஒரே நீலத்தையா போட்டுக் கொள்வார்கள்?

அது சரி. மெஹந்தி அன்று எங்கேயாவது ஈகோ ஃப்ரெண்ட்லி என்று இலை, தழை, மரவுரி இப்படி எதையாவது கட்டிக்க கொண்டு வாருங்கள் என்று சொல்லி விடப் போகிறார்கள்..

ஜோக் சகிக்கல..

அதற்கு மேல் எப்படி பேசுவது? ஒரு நாள்தானே தன்னிடம் இருக்கும் ஏதோ ஒரு புடவையை சாரு  கட்டிக்கொண்டு விடுவாள் என்று வழக்கம் போல் தவறாக நினைத்தேன்.
----
அடுத்த வாரத்தில் ஒரு நாள் நான் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய பொழுது, வீட்டில் ஏகப்பட்ட கட்டை பைகள் உள்ளே புதுத் துணிகள். என்னது இது? கல்யாணத்துக்கு ஜவுளி வாங்குற மாதிரி வாங்கியிருக்க?

"ஆமாம் கல்யாணத்துக்குதான்"

"கல்யாணமா? யாருக்கு?"

"எவ்வளவு தடவை சொல்ல முடியும்? எங்க சக்கு அத்தை பேத்திக்கு."

"அதுக்கு அவர்கள் ஜவுளி வாங்கட்டும், நாம் ஏன் வாங்க வேண்டும்?"

"ரொம்ப அழகா இருக்கே..! அந்த கல்யாணம் தீமாட்டிக் வெட்டிங், நடக்கப் போறது ஒரு ரிஸார்ட்டுல, அதுக்கு ஏற்றார் போல் ட்ரெஸ் பண்ணிக்க வேண்டாமா?

உன்கிட்ட வேற சாரியே இல்லையா?

"அதெல்லாம் அல்ரெடி வேற கல்யாணங்களுக்கு கட்டிண்டாச்சே..? பாக்கறவங்க என்கிட்ட வேற புடவையே  இல்லன்னு நினைச்சுக்க மாட்டார்களா?"

"அத்தனை பேர்கள் வரும் கல்யாணத்தில் நீ கட்டிக்கொண்டு வரும்  வரும் புடவையில்தான் எல்லோருடைய கவனமும் இருக்குமா?"

"அப்போது கவனிக்காவிட்டாலும் போட்டோவில் தெரிந்து விடாதா? இப்போதுதான் எல்லோரும் ஏதாவது நிகழ்ச்சிக்குப் போனால் உடனே அதை ஃபேஸ் புக், இன்ஸ்டாகிராம் என்று எல்லாவற்றிலும் போட்டு விடுகிறார்களே? உங்களுக்கும் ட்ரெஸ் வாங்கியிருக்கிறேன்.".

"எனக்கா? எனக்கு எதற்கு? ஒரு வேஷ்டி, சட்டை போறாதா?"

"கலர் கோட் இருக்கு என்று சொன்னதை மறந்து விட்டீர்களா? சங்கீத்திற்கு ஷர்வாணி, கல்யாணத்திற்கு போட்டுக் கொள்ள இந்த சட்டை" என்று ஒரு பச்சை கலர் பள பள சட்டையை காட்டியதும், கொஞ்சம் மிரண்டு போனேன்.

"சங்கீத்திற்கெல்லாம் போகப் போகிறோமா என்ன?"

"போகாமல்? எங்கள் வீட்டில் எல்லோரும் போகும் பொழுது நான் மட்டும் போகாமல் இருந்தால் நன்றாக இருக்குமா?" என்றவள் தொடர்ந்து "எப்படியும் எல்லோரும் காரில்தான் போக வேண்டும், ட்ராவல்ஸில் கார் எடுத்துக் கொண்டு செலவை ஷேர் பண்ணிக் கொள்ளலாம்" என்றாள்.
.....

அந்த ரிசார்ட்டை நாங்கள் அடைவதற்கு இரண்டு மணி நேரங்களாகியது. சங்கீத் எனப்பட்ட நிகழ்ச்சியில் அலறும் ஹிந்தி, தமிழ் சினிமா பாடல்களுக்கு பெண், பிள்ளை வீட்டார் ஆடிய டான்ஸ்தான் முக்கியமாக இருந்தது. இரு வீட்டிலிருந்தும் சிலர் தங்கள் உறவினர்களை பற்றி(மணமக்களின் பெற்றோர்களை பற்றியும், மணமக்களை பற்றியும்) அறிமுக உரை போல் நிகழ்த்தினார். பின்னர் மணமக்கள் உட்பட எல்லோரும் ஆடிய நடனம். அதை கற்பிக்க ஒரு ட்ரைனர் வேறு உண்டாம் அவருக்கு எத்தனையோ ஆயிரம் என்று பெண்ணின் அம்மா பெருமையாக சொல்லிக் கொண்டார். என்னதான் கற்பித்தாலும் எல்லோருக்கும் நடனமாட வந்து விடுமா? ஆடத்தெரியாதவர்கள் ஆடும் நடனத்தை பார்க்கும்

துர்பாக்கியம் பார்வையாளர்களுக்கு. இரவு உணவில் ஏகப்பட்ட ஐட்டங்கள் இருந்தாலும் சங்கீத்திற்கு இடையே கட்லெட், மினி சமோசா, ஃபிங்கர் சிப்ஸ் என்றுவந்து கொண்டே இருந்ததை கொறித்ததால் சரியாக சாப்பிட முடியவில்லை.

மறு நாள் கல்யாணத்தில் ஊஞ்சல் நடந்து கொண்டிருந்த பொழுது ஒரு பெரியவர்,"கொஞ்சம் என் கூட வர முடியுமா? புது இடங்களில் நடப்பது கொஞ்சம் சிரமமாக இருக்கும், இப் யூ டோன்ட் மைண்ட்" என்றார். இயற்கையின் அழைப்பு. டாய்லெட் எங்கே என்று தேடி கண்டுபிடித்துக் கொண்டு அம்மா வீடு எங்கே? இன்னும் கொஞ்சம் தூரம் என்பது போல நடந்து நடந்து நடந்து சென்றோம். செல்லும் வழியில் அவர் மாப்பிள்ளை வீட்டை சேர்ந்தவர் என்றும் இதே ரிசார்ட்டில்தான் தங்கியிருக்கிறார்கள் என்றும் தெரிந்தது.

"உங்க ரூமுக்கே போயிருக்கலாமே?" என்றேன். அதுவும் ஒண்ணும் கிட்டக்க இல்ல " என்றார். ஒரு வழியாக ஜோலியை முடித்துக் கொண்டு வந்த பொழுது தாலி கட்டி முடித்து விட்டார்கள். "

"முக்கியமான நேரத்தில் எங்கே போய் விட்டீர்கள்?" என்று அவரை கடிந்து கொண்டது அவர் மனைவியாகத்தான் இருக்க வேண்டும்.

"நான் என்ன பண்ண முடியும்? ஆத்திரத்தை அடக்கிடலாம்..."

"சரி, சரி, அதோட நிறுத்திக்கோங்கோ.. பலதானம் வாங்கிக்க கூப்பிடறா.."

மத்தியான சாப்பாடு இரண்டு பாயசம், மூன்று ஸ்வீட், என்று அமர்க்களமாக இருந்தது. சிறு வயதில் இலையில் போடுவதை வீணாக்கக்கூடாது, கையில் வாங்கி கொள் என்பாள் அம்மா.. இப்போது அப்படி செய்ய முடியாதே. அடுத்த முறை கல்யாணங்களுக்குச் செல்லும் பொழுது, கையில் ஒரு ஜிப் லாக் கவர் கொண்டு செல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். அதிகமாக இருக்கும் இனிப்புகளை ஜிப் லாக்கில் போட்டுக் கொண்டு விடலாம்.

ஒரு வழியாக எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினோம். லெட்டர் பாக்ஸை திறந்து பார்த்த சாரு கையில் ஒரு திருமண பத்திரிகை. எனக்கு வயிற்றை கலக்கியது.

============

புதன், 20 மே, 2020

## நேருவின் கதையை திரைப்படமாக எடுத்தால் கமல் பொருத்தமாக இருப்பாரா?

வல்லிசிம்ஹன் :

சைனா,தெற்கு கொரியா,ஜெர்மனி என்று மீண்டு வரும்
தொற்று யாருக்கும் கண்ணில் படவில்லையா.?
இல்லை தங்களுக்கு ஒன்றும் நேராது என்ற அசட்டுத் தைரியமா.?

# தொடர்ந்து வரும் தொற்று கண்ணில் படாமல் இல்லை. ஆனாலும் லாக் டவுன் என்பது ஓரளவுக்கு மேல் போனால் விபரீதமான பொருளாதாரச் சிக்கல்களை உண்டாக்குவதுடன் சட்ட ஒழுங்கு அத்து மீறல்களுக்கும் வழி வகுக்கும். ஆகவே

தான் சில நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

& அரசாங்கம் உயிர் பிழைத்திருக்க என்ன வழி என்று சொல்லிவிட்டார்கள். சாம, தான, பேத , தண்ட வழிகளில் அறிவுறுத்திவிட்டார்கள். இதற்கு மேலும் புரியாதவர்களுக்கு என்ன செய்ய இயலும்?

கமலா ஹரிஹரன் :

ராசிகளைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
பொதுவாக முகராசி, கைராசி (எல்லாமே தலைவர் படங்கள் இல்லையா.. .ஆனால் எல்லாமே நன்றாகத்தான் ஓடின. தியேட்டரை விட்டு அல்ல.. ஹா ஹா) என்றெல்லாம் பார்க்கிறோமே அது சரிதானா? இல்லை அப்படி பார்க்கிறவர்களின் மனோபாவங்கள் முறைதானா?

# முகராசி, கைராசி எல்லாம் சரி தப்பு என்று வகைப் படுத்தக் கூடாது. அடுத்தவருக்குத் தீங்கு செய்யாத எதுவும் "தப்பு" ஆக முடியாது. பார்க்கிறவர் மனோபாவம் முறை "கெட்டதும்" அல்ல. இதெல்லாம் நம்பிக்கை பாற்பட்ட விஷயம். அவர்களுக்கு திருப்தி தருகிறதென்றால் இருந்து விட்டுப் போகட்டுமே. நம்பிக்கைகள் பலவும் மூட நம்பிக்கை யாகவும் இருக்கக் கூடும்.

ஜாதகம், நட்சத்திரம், ராசி, பெயர்ச்சி பலன்கள் விஷயத்தில் இருவேறு எதிரெதிர் மனோபாவம் காணப்படுகிறது. கணக்குப் போட்டு துல்லியமாக (நல்லது & அல்லாதது) பலன் சொல்வது ஒரு பக்கம். காழியூர் ஹரிகேசநல்லூர் மாதிரி "நல்வாக்கு" மட்டும் சொல்வது மறு பக்கம். நல்வாக்கு பலராலும் விரும்பிப் பார்க்கப் படுகிறது. இதுவும் திருப்தி சம்பந்தப்பட்ட ஒன்றுதான்.

நான் ராசிபலன் பக்கம் திரும்பிப் பார்ப்பதில்லை. என் ஜாதகம் அதிர்ஷ்ட ஜாதகம். அதனால்தான் நான் பார்க்கத் தேவையின்றிப் போனது என்று வாதம் செய்வோருமுண்டு.

& கைராசி படம் தலைவர் படம் அல்ல. ஜெமினிகணேசன் - சரோஜாதேவி நடித்தது. ராசி என்ற பெயரோடு வந்த எந்தப் படத்தையும் நான் பார்த்ததில்லை. அந்தப் படங்களைப் பார்க்கும் ராசி எனக்கு இல்லை போலிருக்கு! (நிற்க. கன்னிராசி, மகராசி என்ற பெயர்களில் கூட படங்கள் வந்துள்ளன.)

நெல்லைத்தமிழன் :

சிகரெட், கஞ்சா, பீடி, குடி, குட்கா, புகையிலை என்று இவை எல்லாமே உடல் நலத்துக்குக் கேடுதான். அப்படி இருக்கிறபோது, அரசாங்கம், அந்த ஃபேக்டரிகளை, தொழிலை இழுத்து மூடாமல், மக்களைப் பார்த்து 'நீ இதைச் செய்யாதே' என்று சொல்வதில் ஏதேனும் அர்த்தம் இருக்கா?

குட்கா தயாரித்தால் மரண தண்டனை மட்டுமல்ல, குடும்பச் சொத்துகள் அனைத்தும் பற்முதல் செய்யப்படும் என்று சொன்னால் போதாதோ? எதுக்கு விளம்பரம், சினிமாக்களில் சின்ன எழுத்துகள் எல்லாம்?

குடி, குட்கா போன்றவைகளை அனுமதிக்கும் அரசு, ஏன் போதை மருந்துகள், கஞ்சா போன்றவற்றையும் அனுமதிக்கக்கூடாது? அவைகளும் தொழில்கள் இல்லையா?

# "குடி குடியைக் கெடுக்கும்" "புகை பிடித்தல் உடல் நலத்துக்குக் கேடு" என்றெல்லாம் சின்ன எழுத்து கார்டுகள் கையாலாகாத்தனத்தின் பலவீனமான வெளிப்பாடுகள். அர்த்தமற்ற போலிச் சடங்குகள். பொறுப்பைத் தட்டிக் கழிக்கும்

நொண்டிச் சமாதானங்கள்.

மதுவைப் பொறுத்தவரை மீளாநிலைக்கு வந்து விட்டோம்.

மிகக் கடுமையான சட்டங்கள் மிக அதிகமான ஊழலுக்கு வகை செய்யும். மக்களே உணர்ந்து ஒதுக்காதவரை இந்த அவலங்களிலிருந்து விமோசனம் இல்லை. மதுக்கடை மூடி இருந்தால் ஷேவிங் லோஷனைக் குடிக்கும் முட்டாள்களைக் கொண்டதல்லவா நம் பாரத மணித் திருநாடு !

& புகையிலை சில சுத்திகரிப்பு செயல்முறைகளிலும் பயன்படுத்துகிறார்கள் என்று கேள்வி. சில விவசாயிகள், செடிகளில் வருகின்ற பூச்சிகளை அழிக்க, புகையிலை கலந்த நீரைத் தெளிப்பார்கள் என்றும் கேள்விப்பட்டுள்ளேன். எல்லா பொருட்களிலும் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்து, நன்மையையும் உண்டு, தீமையும் உண்டு.

பிசிபெளாபாத்துக்கு உருளை வறுவல் நல்லா இருக்குமா அல்லது வாழைக்காய் சிப்சா?

# முதல்ல பிஸி பேளா பாத் நல்லா இருக்குமா ?

& வறுவல்களை தனியே நொறுக்குவதுதான் எனக்குப் பிடிக்கும். வாழைக்காய் வறுவலைவிட, உ வ crispy என்பதால் என்னுடைய ஓட்டு உ வ வுக்கே!

பானுமதி வெங்கடேஸ்வரன்:

1. நேருவின் கதையை திரைப்படமாக எடுத்தால் கமலஹாசன் பொருத்தமாக இருப்பாரா? இன்னும் ஏன் நேருவின் பயோ பிக் எடுக்க வேண்டும் என்று யாருக்கும் தோன்றவில்லை?

# கமல்ஹாசன் தன் அதி மந்திர ஸ்தாயி குரலில் பேசாத பட்சத்தில் எந்த ரோலுக்கும் பொருத்தமானவர்தான்.

நேருவின் வாழ்க்கையில் மூன்று முக்கிய அம்சங்கள்.
ஒரு இங்கிலாந்து பெரிய இடத்துப் பெண்மணியுடனான "நட்பு". இதை ரஞ்சகமாகப் படமாக்கினால் சிக்கலான வழக்கு வாய்தாக்களுக்கு வகை செய்யும்.

இரண்டு அவரது நீண்...ட நாள் சிறைவாசம். இதை சுவாரஸ்யப் படுத்துமளவுக்கு நிகழ்ச்சிகள் வெளிப்படுத்தப் படவில்லை.

அவர் 17 ஆண்டுக்கு மேலாக எதிர்ப்பே இன்றி ஓரளவு வெற்றி கரமாக வகித்த பிரதமர் பதவி.  இதிலும் சினிமாடிக் கன்டென்ட் கம்மி.

காங்கிரஸ் மாதிரி கட்சி, பெரும் முதலீடு செய்து படம் எடுத்தால்தான் உண்டு. மற்றபடி வேறு யாரும் ரிஸ்க் எடுப்பது துர்லபம்.

& வேடப் பொருத்தம் கொஞ்சம் இருக்கலாம்.



ஆனால், இந்தக் காலத்தில் நேருவாக வந்து, அவர்

" தொழில்துறை முன்னேற்றங்கள் நம் பின் நின்றாலும், ஏழை விவசாயியின் பிளந்து போன ஏர்க்காலின் முனையில், கடந்துபோன நாட்களின் காயங்கள் இழந்து போன பிம்பங்களாக பரிதவித்தால், செஞ்சோற்றுக் கடன் தீரும் நாள் வருமா? "

என்று ஒரு ட்வீட் போட்டார் என்றால், காந்தியே ஃபிரேமை உடைத்துக்கொண்டு படத்திலிருந்து இறங்கி ஓடிவிடுவார்!

2. சமீபத்தில் படித்த புத்தகம் எது?

# ஜெ கிருஷ்ணமூர்த்தி "Awakening of Intelligence" . எல்லாரும் படிக்க வேண்டிய அருமையான புத்தகம்.

& (மேற்கூறப்பட்டுள்ள "Awakening of Intelligence"  புத்தகம் PDF என்னிடம் உள்ளது. வேண்டுவோர் வாட்ஸ் ஆப் / மின்னஞ்சல் முகவரி தெரிவித்தால், அவர்களுக்கு அதை அனுப்புகிறேன்)

நான் படித்தது Ribardo Bansi எழுதிய Pulao in Persia என்ற புத்தகத்தின் மொழிபெயர்ப்பு.

3. சொந்தப்படம் எடுக்கும் நடிகர்கள் ஒன்றுக்கு இரண்டாய் அழகான கதாநாயகிகளை தங்களுக்கு ஜோடியாக போட்டுக்கொள்கிறார்கள். ஆனால் கதாநாயகிகளோ ஒரு சொங்கி ஹீரோவை கதாநாயகனாக்குகிறார்களே?

# பதில் அளிக்கும் தகுதி எனக்கில்லை.

& சொந்தப்படம் எடுக்கும் நடிகர்கள், தன்னுடைய ரசிக, ரசிகைகள் + நடிகையின் ரசிகர்களை கவர்ந்து படம் பார்க்க இழுப்பதற்காக அழகான கதாநாயகிகளைப் போட்டு படம் எடுக்கிறார்கள். நடிகர்களுக்கு ரசிகமன்றங்கள் உண்டு. பெரும்பாலான நடிகைகளுக்கு அப்படி எல்லாம் மன்றங்கள் கிடையாது. நடிகைகள் எடுக்கும் படங்களில், அந்த நடிகைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும் என்பதால், பல முன்னணி நடிகர்கள் நடிக்க ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அதனால் சொங்கி நடிகர்களே சரணம் என்ற நிலை.

4. வீரமாமுனிவருக்கு முன்பு வரை தமிழில் ஒற்றைக் கொம்பு , இரட்டை கொம்பு கிடையாது, ஒற்றெழுத்துகளில் மேலே புள்ளி வைக்கும் பழக்கம் கிடையாது. ஓலைச்சுவடிகளில் எழுதி வந்த காலத்தில், சுவடியில் புள்ளி வைத்தால் சுவடி கிழிந்து விடும் என்பதே காரணம் என்கிறார்களே, அப்படியானால் வீரமாமுனிவர் காலத்திற்கு முன்னால் தமிழில் ஆய்த எழுத்தை எப்படி எழுதியிருப்பார்கள்?

# புள்ளி வைத்தால் பரவாயில்லை ஆனால் சுழி தான் ஓலையை

பாதிக்கும். பழந்தமிழ் எழுத்துக்களில் ஆய்த எழுத்து மூன்று சுழிகளாக இன்றி வேறு மாதிரி இருந்திருக்கும். வேறு எழுத்துக்களின் வடிவங்கள் அப்படி எண்ண வைக்கின்றன.

5. வேலைக்கு சேர்ந்த புதிதில் ஆர்வக் கோளாறில் ஏதாவது அசட்டுத்தனம் செய்திருக்கிறீர்களா?

# இல்லை.

& ஹி ஹி ! நிறைய உண்டு. இப்போ நினைவுக்கு வருவதில் ஒன்று: நான் சேர்ந்தபோது, எங்கள் தொழிற்சாலையில், எங்களுக்கு மூன்று ஆண்டுகள் பயிற்சிக்காலம். முதல் ஆறு மாதங்கள் ஒவ்வொரு பகுதிக்கும் ஒருநாள் அல்லது இரண்டுநாள் சென்று, அந்தப் பகுதியைப் பற்றி அறிந்துகொள்வது. இயந்திர சாலைப் பகுதியில், சில வேலைகளை, கண் தெரியாதவர் சிலர் செய்வார்கள். அப்படி ஒரு வேலை, புதிதாக செய்யப்பட்ட பற்சக்கரங்களில் உள்ள பற்களில் அரம் கொண்டு சுத்தப்படுத்துதல். அந்த வேலையில் ஈடுபட்டிருந்த கண் தெரியாத தொழிலாளியிடம், அவரைப் பற்றிய விவரங்கள் கேட்டறிந்தேன். சுருக்கமான பதில்கள் கொடுத்துக்கொண்டிருந்தார். மேலும் மேலும் கேள்விகள் நான் கேட்டதும், அவர், " தம்பீ - நான் வேலை செய்யும்போது பேசமாட்டேன். ஏன் என்றால், இந்த பற்சக்கரம் ஒவ்வொன்றிலும் நாற்பத்திரண்டு பற்கள். ஒவ்வொரு பற்சக்கரத்தையும், அச்சில் பொருத்தி, ஏதாவது ஒரு பல்லில் ஆரம்பித்து, நாற்பத்திரண்டு பல் எண்ணிக்கை வரும்வரை, கைகளால் அடுத்தடுத்த பல்லை உணர்ந்து , நாற்பத்திரண்டு எண்ணிக்கை வரும்வரை சுத்தம் செய்வேன். நடுவில் என் கவனம் சிதறினால், எண்ணிக்கை தவறிப்போகும். அதனால், வேலை முடித்து நான் ஓய்வு எடுக்கும்போது வந்து கேள்வி கேளுங்க" என்றார். என் ஆர்வ, அசட்டுத்தனம் அப்போதான் புரிந்தது!

6. அரசியல் தலைவர் charismatic ஆக இருக்க வேண்டியது அவசியமா? நம் நாட்டில்தான் இப்படிப்பட்ட நிலையா? வெளிநாடுகளிலும் உண்டா?

# Charisma இல்லாமல் தலைமைக்கு வருவது கடினம். எல்லா நாடுகளுக்கும் இது பொருந்தும். Charisma வெறும் முக அழகு மட்டுமல்ல.

==========================================

வியாழன், 21 மே, 2020

## என்ன எண்ணங்களோ.. என்ன கனவோ... என்ன காரணமோ..

அர்த்தமில்லாத கனவுகள் அடிக்கடி காண்பவன் நான். அதற்கு அர்த்தம் ஏற்படுத்திக் கொள்ள நினைப்பேன்! சில கனவுகள் யோசிக்க வைக்கும்.. என்ன காரணமாய் இருக்கும் என்று! யானை என்னைத் துரத்துவது போல தொடர் கனவு கண்டு அதை தளத்திலும் பகிர்ந்திருக்கிறேன். வேறு சில நீண்ட கனவுகள் பற்றியும் எழுதி இருக்கிறேன். அடிக்கடி அல்லது அதிகம் படிக்கப்படும் பதிவுகளில் அடிக்கடி இடம்பெறும் பதிவாகவும் கனவுகள் பற்றிய பதிவு இருக்கிறது!

அம்மா திதி புது வீட்டில் கொடுக்க முடிந்த என்னால் அப்பாவின் திதியை கொடுக்க முடியவில்லை.

பொதுவாகவே நான் அடிக்கடி ஒன்றைச் சொல்லிக் கொண்டிருந்தால் அது நடக்காமல் போய்விடுகிறது. எல்லோரும் சாதாரணமாக அடிக்கடி ஏதாவது ஒன்றை, அதையே நினைத்து / சொல்லிக் கொண்டிருந்தால் அது நடக்கும் என்றுதான் சொல்வார்கள். என் சமீபத்து அனுபவம் நேர்மாறாய் இருக்கிறது.

இந்த தேதியிலிருந்து இரண்டு வாரங்கள் விடுப்பு எடுக்கப்போகிறேன் என்று சொல்லிக்கொண்டே இருந்தேன். எடுக்க முடியாமல் போனது. வீட்டைக் காலி செய்யப்போகிறேன் என்று நான் சொன்ன தேதியும், காரணங்களும் மறுக்கப்பட்டன - இல்லாத சட்டங்களையும் அதிகாரத்தையும் காட்டி!

அது மாதிரி நான் சொல்லிக் கொண்டிருந்தது, "அம்மாவை இந்த வீட்டுக்கு அழைத்து வந்தாச்சு.. அடுத்து அப்பாவையும் அழைத்து வரவேண்டும்..."

ஏதோ அப்பா அம்மா எல்லாம் பழைய வீட்டிலேயே இருந்து கொண்டு எங்களைத் தேடிக்கொண்டிருப்பது போலவும், உரிய முறைப்படி அவர்களை இங்கு வரவைப்பது போலவும் மனதுக்குள் ஒரு நினைப்பு! 26 வருடங்களுக்கும் மேல் அங்கிருந்த காரணமோ.. அல்லது அந்த வீட்டில் அப்பாவும் அம்மாவும் வந்து புழங்கிய காரணமோ!


அப்படிச் சொல்லிக் கொண்டிருந்ததில் அப்பாவுக்கு இந்தப் புது வீட்டின் அமைப்பு ரொம்பப் பிடிக்கும் என்கிற உணர்வு மேலோங்கி இருந்தது. ஆனால் கொரோனா அமர்க்களத்தில் திதி கொடுக்க முடியாமல் போக, நான் சொல்லிக் கொண்டிருந்தது / நினைத்துக் கொண்டிருந்தது நடக்கவில்லை. கொஞ்சம் ஏமாற்றம்தான்.

ஆனால் மார்ச் மாதத்தில் ஒரு கனவு வந்தது. அதில் அப்பா வந்தார். அதிசயம்! அதுவும் புது வீட்டில் இருந்தார். ஆனால் அந்தக் கனவின் வேறு சில அம்சங்கள் சற்றே சங்கடமான விஷயங்களாக இருந்ததால் வெளியில் சொல்லிக்கொள்ள முடியவில்லை... என்ன எண்ண ஓட்டங்களோ... என்ன கனவோ... என்ன காரணமோ..

யானை துரத்துவது போல கனவு வந்தபோது நான் பிள்ளையாருக்கு ஏதோ வேண்டுதல் டியூ என்று சொன்னார்கள். வேறு சில கனவுகளுக்கும் வெவ்வேறு பலன்கள் அவரவருக்குத் தோன்றியது போல சொல்லிக் கொண்டிருந்தார்கள். பலன் பற்றி பெரிதாக கவலைபப்டுவதில்லை என்றாலும் சிலசமயம் சில கனவுகள் மனதை அலைக்கழிக்கும்தான்!


அதுவும் அதிகாலைக் கனவுகள் பலிக்கும் என்றும் சொல்வார்கள். நல்ல கனவாய் இருந்தால் சரி, கெட்ட கனவாய் இருந்தால்...? எனக்கும் வேறு சிலருக்கும், ஏன், உங்களில் சிலருக்கும் உங்கள் கனவுகள் பலித்த நேரங்கள் உண்டு என்பது நமக்குத் தெரியும்.

ஸிக்மாண்ட் ப்ராய்ட் புத்தகம் நான் படித்ததில்லை. கனவுகள் ஏன் வருகின்றன ('கனவு ஏன் வந்தது? காதல்தான் வந்தது..' என்று பாடல் வரி மனதில் ஓடுகிறது!)




**புது வீடு வந்ததும் மெதுவாய் புத்தகப் பெட்டிகளைத் திறந்து கிளறும்போது இந்தப் புத்தகம் கிடைத்தது! கனவுகளும் அதன் பலன்களும். அப்பா 1963 இல் வாங்கி இருக்கிறார் பாருங்கள்..**

**அவர் காப்பிரைட் பற்றி பேசி இருக்கிறார். ஐம்பது வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டபடியாலும், நான் அந்தப் புத்தகத்தை பதிப்பிக்கப் போவதில்லை என்பதாலும் நான் விதி மீறவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்! காப்பிரைட் உரிமை ஐம்பது வருடங்கள்தான் செல்லும் என்று எங்கோ படித்த நினைவு!**


முதற் பதிப்பு—ஜனவரி 1962

எல்லா உரிமைகளும் ஆசிரியருக்கே. ஆகையால் இந்நூலை எனது உத்தரவின்றி யாரும் எம்மொழியிலும் அச்சிடக்கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். —ஆசிரியர்

புத்தகம் கிடைக்குமிடம் :
எம். கே. சபாபதி,
5, முத்துகிருஷ்ண முதலி தெரு,
மைலாப்பூர், - சென்னை—4.

வியாசர் கனவுகளுக்கு பலன் எழுதி இருக்கிறாராம். அதைப் படித்ததும் பகிரலாம் என்று தோன்றியது. ....

இப்போதெல்லாம் எழுத ஆரம்பித்த விஷயம் நீண்டு விடுவதால் இரண்டு வாரங்கள் தொடர்வது தொடர்கதையாகி வருகிறது. எப்படியோ வியாழன் ரொம்பினால் சரி என்று எனக்குத் தோன்றும். நெல்லையின் சதவிகிதக் கணக்கு சரியாய் வரும் என்றுதான் தோன்றுகிறது. ஏகாந்தன் ஸார் என்ன சொல்கிறாரோ!

அது மாதிரி இந்தப் புத்தகத்தின் முன்னுரை பகுதிகளை அடுத்தவாரம் தருகிறேன்.

===================================================================

தினமலர் சொல்கிறார்கள் பகுதிக்கு லிங்க் தரமுடியாது என்பதால்தான் நல்ல விஷயங்கள் அங்கு கிடைக்கும்போது அதை எடுத்து பேஸ்புக்கில் பகிர்ந்து விட்டு அதற்கு லிங்க் கொடுப்பேன் - இதை முன்னரே சொல்லி இருக்கிறேன். பாஸிட்டிவ் செய்திகள் பல இபப்டிக் பகிர்ந்திருக்கிறேன். அது அல்லாத சில விஷயங்களை ஒன்றிரண்டு வியாழனில் பகிர்ந்திருக்கிறேன். அதுபோல ஒன்று...

முன்னர் ரேடியோ செய்திகள் கேட்டவர்களுக்கு "ஆகாஷ்வாணி... செய்திகள்... வாசிப்பது.. சரோஜ் நாராயணஸ்வாமி.." எனும் குரல் பரிச்சயமாகி இருக்கும். காலையும் மாலையும் 7.15 க்கு ஒலிபரப்பாகும் தமிழ் செய்திகள் அது. மறைந்த

பூர்ணம் விஸ்வநாதன் கூட இப்படி செய்தி வாசித்திருக்கிறார்.

சரோஜ் நாராயணஸ்வாமி பற்றி தினமலர் 'சொல்கிறார்கள்' பகுதியில் வந்ததை இங்கு பகிர்கிறேன்.



'ஆகாசவாணி... செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயணசுவாமி...' என்ற கணீர் குரலுடன், 1962 முதல், 50 ஆண்டுகள், 'ஆல் இந்தியா ரேடியோ'வில் பணியாற்றி ஓய்வுபெற்று, மும்பையில் வசிக்கும் சரோஜ் நாராயண சுவாமி:

"ஆல் இந்தியா ரேடியோவில் செய்தி வாசிப்பாளராக நான் தேர்வான உடனே, என் மாமா, 'உன் குரல் உலகம் எங்கும் ஒலிக்கும்; மிகவும் புகழ் அடைவாய்' என, ஆசிர்வாதம் செய்தார்.

பி.ஏ., ஆங்கிலம் படித்து விட்டு, தமிழ் செய்தி வாசிப்பாளராக ஆனது, எனக்கே ஆச்சர்யமாக இருந்தது. என் தாய்மொழி தமிழ் மீது, எனக்கு இருந்த ஆர்வம் தான், அந்த மொழியில் சிறப்பாக செய்தி வாசிக்க துாண்டியது. மேலும், என் தொழிலை நான் மிகவும் நேசித்தேன்.

காவிரிக் கரையோரம் வசித்த பெற்றோருக்கு பிறந்ததால், தமிழ் என் நாவில், சரளமாக வந்தது; அன்று, தமிழகம் முழுவதும் என் குரலை கேட்க காத்திருந்தது.

அதை இன்று நினைத்தாலும் ஆச்சர்யமாக உள்ளது.ஆரம்ப நாட்களில், செய்தி வாசிக்க நிறைய பயிற்சி செய்ய வேண்டும். ல, ள, ழ மற்றும் ண, ன எழுத்துக்களை சரியாக உச்சரிக்காவிட்டால், பொருளே மாறிவிடும். ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் இருக்கும் செய்தியை, தமிழில் மொழி மாற்றம் செய்த பிறகே, தமிழில் வாசிக்க முடியும்.வெளிநாட்டு செய்திகளை வாசிக்கும் போது, அந்த நாட்டின் தலைவர்கள் பெயரையும் சரியாக உச்சரிக்க வேண்டும். அந்த நாட்டில் உள்ள அதிகாரிகளுக்கு போன் செய்து, அந்த தலைவர்களின் பெயரை எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதை, கேட்டு தெரிந்து கொள்வேன்.

நான் வாசிப்பதில், எந்த தவறும் வந்து விடக் கூடாது என்பதில், மிகுந்த கவனமாக இருப்பேன்.

எந்த வார்த்தைகளுக்கு இடையே, இடைவெளி விட வேண்டும்; எந்த வார்த்தைக்கு, அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை அறிந்து, அதன்படி செய்வேன்.

செய்தி வாசிக்கும் நேரத்திற்கு, 2 - 3 மணி நேரத்திற்கு முன்பாகவே, அலுவலகம் சென்று விட வேண்டும்.

எனக்கு, எப்போதும் அழகாக இருக்க பிடிக்கும். என் புகுந்த வீட்டில், என்னை யாரும் குறை கூறியது இல்லை. என் கணவருக்கு என் மீது மிகுந்த பாசம் உண்டு.

**உதாரண தம்பதியாக நாங்கள் வாழ்ந்தோம்.**


**குழந்தைகள் பிறந்ததும், கணவரும், அவரின் பெற்றோரும் மிக ஆதரவாக இருந்தனர். அதனால், செய்தி வாசிக்க, இரவில் எந்த நேரமும் சென்று வர முடிந்தது.என் கணவர் நாராயணசுவாமி, எனக்கு கிடைத்த வரம். அவர் இறந்து, 10 ஆண்டுகள் ஆகின்றன. எங்களுக்கு ஒரு மகன், மகள். இருவரும் உயர்ந்த வேலைகளில் உள்ளனர். ஒவ்வொரு நாளும் புதுப்புது செய்திகளை அறிந்து கொள்ள, அதை வாசிக்க எனக்கு கிடைத்த வாய்ப்பு, இறைவன் கொடுத்த வரம்!--**

**==================================================================================================**

**பொக்கிஷம் :**

**இந்த வாரம் மிச்சமிருக்கும் ரூபி ஜோக்ஸ் மற்றும் கடைசியில் மற்றொரு மதன் ஜோக்... சுருக்கமாக முடிக்கிறேன்!**

**அப்படியே மதன் ஞாபகத்துக்கு வரவில்லை? அவரேதான் இந்தப் பெயரிலும் வரைந்தாரோ!**




**மறக்க மாட்டேங்க.. நான் அப்படிப்பட்ட ஆளில்லீங்க...!**



‘‘போன மாசம் பத்து ரூபா கடன் கொடுத்தேனே... மறந்துட்டியா?!...’’

‘‘சே, சே!...நேத்து கூட நீ தெரு முனையிலே வர்றதைப் பார்த்துட்டு ‘டக்கு’னு பக்கத்து சந்து வழியா போயிட்டேனே!... மறந்திருந்தா போவேனா?!’’

**இதுவன்றோ நிரூபணம்!**




"அவ்வளவுதானா?  கொஞ்சம் பகட்டாய்ச் சொல்லக் கூடாதா?" என்று பார்க்கிறாரோ அந்தப் பெண்மணி?!





சிரிப்புத் திருடன் சிங்காரவேலு ஞாபகம் வரவில்லை?



“நான் பர்சுலே நிறைய ரூபா எடுத்துக்கிட்டுப் போற வழக்கமில்லேன்னு சொன்னு நம்பணும்!... இந்தா... என் ‘விசிட்டிங் கார்டு’... நாளைக்கு பதினேரு மணிக்கா ஆபீசுக்கு வந்து பாரேன்!...”

**இது மதன்!**




==========================================================================================

வெள்ளி, 22 மே, 2020

# வெள்ளி வீடியோ : பாதத் தாமரைப் பூவென்ன ஆகும் பஞ்சு பட்டாலும் புண்ணாகிப்போகும்

நேயர் விருப்பப் பாடல் ஒன்று.

1995 இல் வெளிவந்த ஜீன்ஸ் திரைப்படத்திலிருந்து அன்பே அன்பே கொல்லாதே என்று ஹரிஹரன் அனுராதா ஸ்ரீராம் பாடும் பாடல். வைரமுத்துவின் வரிகளுக்கு ஏ ஆர் ரெஹ்மான் இசை.



அன்றைய நிலையில் இந்திய சினிமா உலகில் மிகவும் பொருட்செலவில் எடுக்கப்பட்ட படம். பிரசாந்தின் ரோலில் முதல் விருப்பம் அப்பாஸ் ஆக இருந்ததாம். அவர் தேதிகள் இல்லை என்று சொல்ல அடுத்த சாய்ஸ் அஜித்துக்கு. அவரும் கைவிரிக்க, பிரசாந்த் தனது 7 படங்களின் கால்ஷீட்டைத் துறந்து இதில் நடித்துக் கொடுத்தாராம்.



கவுண்ட்டமணியை வில்லனாக போட ஆசைப்பட்ட சங்கரின் எண்ணம் அவரின் தேதி இல்லாக்குறையால் நடக்காமல் போனதாம். ஷங்கரின் படங்களில் முதல் முறையாக பெரும்பாலான பகுதிகள் வெளிநாட்டில் படம்பிடிக்கப்பட்டதாம். 2013-2014 களில் பிரசாந்த் இந்தப் படத்தின் இரண்டாம் பகுதியை தனது தந்தையுடன் இணைந்து எடுப்பதாகச் சொல்லி இருந்தார். கைவிடப்பட்டு விட்டது போலும்.

நேயர் விருப்பத்தைக் கேட்டிருப்பவர் யார் என்று சொல்லவில்லையே...! ரமா ஸ்ரீநிவாசன்.

அன்பே அன்பே கொல்லாதே
அன்பே அன்பே கொல்லாதே
கண்ணே கண்ணை கிள்ளாதே

பெண்ணே புன்னகையில் இதயத்தை வெடிக்காதே

ஐயோ உன்னசைவில் உயிரைக் குடிக்காதே

அன்பே அன்பே கொல்லாதே

கண்ணே கண்ணை கிள்ளாதே

பெண்ணே உனது மெல்லிடை பார்த்தேன்

அடடா பிரம்மன் கஞ்சனடி
சற்றே நிமிர்ந்தேன் தலைசுற்றிப் போனேன்
ஆஹா அவனே வள்ளலடி

மின்னலைப் பிடித்துத் தூரிகை சமைத்து
ரவிவர்மன் எழுதிய வதனமடி
நூறடிப் பளிங்கை ஆறடியாக்கிச்
சிற்பிகள் செதுக்கிய உருவமடி
இதுவரை மண்ணில் பிறந்த பெண்ணில்
நீதான் நீதான் அழகியடி
இத்தனை அழகும் மொத்தம் சேர்ந்து
என்னை வதைப்பது கொடுமையடி

அன்பே அன்பே கொல்லாதே

கண்ணே கண்ணை கிள்ளாதே

கொடுத்து வைத்தப் பூவே பூவே

அவள் கூந்தல் மணம் சொல்வாயா
கொடுத்து வைத்த நதியே நதியே
அவள் குளித்தச் சுகம் சொல்வாயா
கொடுத்து வைத்த கொலுசே
கால் அழகைச் சொல்வாயா
கொடுத்து வைத்த மணியே
மார் அழகைச் சொல்வாயா

அழகிய நிலவில் ஆக்ஸிஜன் நிரப்பி

அங்கே உனக்கொரு வீடு செய்வேன்
உன்னுயிர் காக்க என்னுயிர் கொண்டு
உயிருக்கு உயிரால் உறையிடுவேன்

மேகத்தைப் பிடித்து மெத்தைகள் அமைத்து

மெல்லிய பூ உன்னைத் தூங்க வைப்பேன்
தூக்கத்தில் மாது வேர்க்கின்ற போது
நட்சத்திரம் கொண்டு நான் துடைப்பேன்
பால் வண்ணப் பறவை குளிப்பதற்காக
பனித்துளி எல்லாம் சேகரிப்பேன்
தேவதை குளித்த துளிகளை அள்ளித்
தீர்த்தம் என்றே நான் குடிப்பேன்

அன்பே அன்பே கொல்லாதே

அன்பே அன்பே கொல்லாதே

கண்ணே கண்ணை கிள்ளாதே

பெண்ணே புன்னகையில் இதயத்தை வெடிக்காதே
ஐயோ உன்னசைவில் உயிரைக் குடிக்காதே

அன்பே அன்பே கொல்லாதே

கண்ணே கண்ணை கிள்ளாதே

==================================================================
===============================================

**இனி இந்த வார என் விருப்பப் பாடல்...**

**பிரம்மச்சாரிகள் படம் - 1983 - புலமைப்பித்தன் - எம் எஸ் விஸ்வநாதன் - சுரேஷ் சுலக்ஷனா S V சேகர், YG மஹேந்திரா, வனிதா ஆகியோர் நடித்தது. -இயக்கம் ஸ்வர்ணமூர்த்தி**



**பெயர் போடும்போது பழைய மவுண்ட்ரோடை - சென்னையைப் பார்க்கலாம். பெரிதாய் வேறு ஒன்றும் விவரம் கிடைக்கவில்லை. படம் யூ ட்யூபில் கிடைக்கிறது.**

**இந்தப் பாடல் வழக்கம்போல SPB ட்ரீட். M S விஸ்வனாதன் செமையாய் போட்ட ட்யூனை அதகளப் படுத்தியிருக்கும் SPB.**

கமதநி ஸாநிதப கமகஸ நிஸநித நான் பாட
தகதிமி தாமென தோமென தையென நீயாட
இடை மின்னெழுதும் உடல் பொன்னெழுதும் ஒரு மான்தானோ
சுரம் முன்னெழுதும் தமிழ் பண்ணெழுதும் இசை தேன்தானோ
அழகிய திருமுக தரிசனம் தந்திட வாராயோ
அபிநய விழிகளில் கவிமழை சிந்திட பாராயோ

பாதத் தாமரைப் பூவென்ன ஆகும்
பஞ்சு பட்டாலும் புண்ணாகிப்போகும்
அழகிய செம்பஞ்சு தீட்டாத முன்னே
அல்லி பூவண்ணம் காட்டாதோ கண்ணே
அது மண்படுமே அதில் புண்படுமே மனம் தாங்காதே
எழில் தென்படுமே பிறர் கண்படுமே வழி போகாதே

தங்க மேகலை சங்கீதம் பாட

தாளம் தப்பாமல் செவ்வாழை ஆட
அசைந்திடும் மேலாடை  பூப்பந்தல் போட
ஆடும் உன் வண்ணம் நானென்ன கூற
எழில்நந்தவனம் அதில் வந்தமரும் குயில் நானன்றோ
உயர் கற்பனையில் இசை அர்ச்சனைகள் செய்யும் நாளென்றோ
தகதிமிதோம் தாம்தகித்தோம்

===============

சனி, 23 மே, 2020

# பன் பட்டர் ஆப்பிள் ஜூஸ்

அன்பு ஸ்ரீராம்,

கொரோனா ஒழிப்பு யுத்தத்தில், மாதக்கணக்கில் அயராது இயங்கும் நமது டாக்டர்கள், நர்ஸுகளை எவ்வளவு பாராட்டினாலும் போதாது.
என்னதான் செய்வது!

ம்... அவர்களுக்கு ஒரு பாக்கெட், நெஸ்லே dark சாக்கலேட், பன் (Bun), பட்டர், ஆப்பிள் ஜூஸ் என்று அனுப்புவோமா? கூடவே, ஒரு personalised message :

“Thank you for all you are doing to keep the community healthy and safe.
You are the real Heroes,”  என்று சிறு ’நன்றிக்குறிப்பையும்’ உள்ளே போட்டு அனுப்புவோம்... !



Home quarantine-ல் இப்போது வீட்டிற்குள் உட்கார்ந்திருக்கும் பாலிவுட் நடிகை ஆலியா பட் (Alia Bhatt), தன் வித்தியாச செயல்பாட்டினால் மும்பையின் டாக்டர்கள், நர்ஸுகளை திடுக்கிடவைத்து அசத்திவிட்டார்!

லிங்க்:

அன்புடன்,

ஏகாந்தன்


=============================

துபாய் : கொரோனா பாதிப்புகளால் சிக்கி உணவு போன்ற அத்தியாவசிய தேவைகள் கிடைக்காமல் போராடுபவர்களுக்கு உதவி செய்ய எமிரேட்ஸ் அறக்கட்டளை சில சமூக அமைப்புகளுடன் இணைந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு உணவு வழங்கி வருகிறது.

சுட்டி :

=============================

## இதுவும் கடந்து போகும்.



ரமா ஸ்ரீநிவாசன்

இதையும் தாண்டி ஓர் உலகம்.

யாவரையும் பயமுறுத்தியும், பாடு படுத்தியும், அலைக்கழித்தும் கொண்டிருக்கும் இந்த கோவிட்-19 என்னும் உயிர்கொல்லி நோயை நாம் பார்த்து மருண்டு போகும்போதுதான் அது ஒரு உயிர்க்கொல்லி. நெஞ்சை நிமிர்த்தி நின்று “வாடா ஒரு கை பார்க்கலாம்” என்று முன்னேறினோமேயானால் அது வெறும் காய்ச்சல், சளி, மற்றும் இருமல் பரப்பும் வைரஸ்ஸின் விளையாட்டுதான் என்று புரியும்.

நம் யாவருக்கும் “தெரியாததைப்” பற்றிய ஒரு இனம் புரியாத பயமும் பீதியும்தான் மேலோங்கி நிற்கின்றது. இதுவும் கடந்து போகும் என்ற நம்பிக்கையுடன் நடந்தோமேயானால், கண்டிப்பாக கடந்து போயே போய் விடும்.

ஆம். இது நாம் இதுவரைப் பார்த்திராத நோய். கோடிக் கணக்கான மக்கள் விட்டில் பூச்சிகள் போல் செத்து மடிந்துக் கொண்டிருக்கும் நிலை உலகெங்கும் வியாபித்திருக்கின்றது. ஏன் வந்தது, எப்படி வந்தது, எங்கிருந்து வந்தது என்று எதுவுமே அறியாத நிலைக்கு நாம் தள்ளப் பட்டிருக்கின்றோம். இதையெல்லாம் விட இது எப்போது போகும் என்னும் கேள்விதான் நம் யாவர் மனதிலும் நினைவிலும் எழுந்து கொண்டே இருக்கின்றது.

இந்த குழப்பங்கள் யாவையும் ஒரு புறம் இருக்க, இந்நோயை பற்றிய அறிவியல் நுனுக்கங்களை பற்றி ஆராயவும், எப்படியாவது அதற்கு ஒரு எதிர் மருந்து கண்டு பிடிக்கவும் உலக விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் இரவும் பகலும் போராடிக் கொண்டிருக்கின்றனர். நமக்கு தெரிந்தது கை மண்ணளவுதான். அவர்களோ அதனுடைய எல்லா பரிமாணங்களையும் ஆராய்ந்து அறிந்தவர்கள்.

இவ்விஞ்ஞானிகளுக்கும் மருத்துவருக்கும் உறுதுணையாய் செயல் படும்

சுகாதாரத் தொழிலாளர்களும், செவிலியர்களும், பரிசோதனைகள் செய்யும் உதவியாளர்களும், மருந்து வழங்கும் பார்மஸிஸ்டுகளும் ஆற்றும் தொண்டானது மகத்தானது.

நம்மைப் போல் அவர்களுக்கும் இல்லங்கள் உண்டு, தாய் தந்தையர் உண்டு, சகோதர சகோதரிகள் உண்டு, கணவன், மனைவி, குழந்தைகள், உறவினர் என்று ஒரு வட்டம் உண்டு. ஆயினும், நாம் நன்றாக வாழ வேண்டும் என்பதற்காக தங்கள் சுகங்களையும், குடும்பத்தையும் பின் தள்ளி தங்கள் கடமையை முன் வைத்துப் பணிபுரிகின்றார்கள்.

இவர்களைப் போலவே அரசாங்க சுகாதார ஊழியர்கள், காவலர், ஆம்புலன்ஸ் வண்டி ஓட்டுனர்கள், நம் வீடுகளில் நமக்கு உதவும் உதவிப் பணியாளர்கள் மற்றும் இறுதியாக இறுதிப் பயண வாகனத்தை ஓட்டுபவர்கள் என்று ஆயிரக் கணக்கானோர் நமக்காக நாம் அறியாமல் வேலை செய்து கொண்டிருக்கின்றனர்.


இவர்கள் யாவர்க்கும் ஒரு வீர வணக்கமாகவும், நன்றி வணக்கமாகவும், சொல்ல முடியாதக் கோடிக் கணக்கான ஜனங்களின் நன்றியுணர்ச்சியின் குரலாகவும் நான் இக்கட்டுரையை வரைகின்றேன்.


ஒவ்வொரு முறையும் நீங்கள் வெளியே செல்லும்போதும் இதை நினைவு கூர்ந்தாலே தானாக மாஸ்க்கும் கையுறையும் அத்தியாவசியப் பொருட்களாக மாறும். நாமும் பிழைப்போம். மற்றவரையும் பிழைக்க விடுவோம்.

ஒவ்வொரு முறையும் நம் பிரதமர் இந்த கோவிட் வீரர்களுக்கு நன்றி கூறும்படி நம்மை விண்ணப்பித்த போது நாம் எந்த சிந்தனையும் இல்லாமல் இயந்திரம் போல் இயங்கி வந்தோம். அவர்களுக்காக கை தட்டினோம்.




அவர்களுக்காக விளக்கேற்றினோம்.






அவர்களுக்காக வணக்கம் தெரிவித்தோம்.

உலகிலேயே சில மனிதர்கள்தான் கடவுளின் சுயப் பிரதிநிதிகளாக பிறவியெடுக்கின்றார்கள். அவ்வகை மனிதர்களில் விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் சுகாதாரத் தொழிலாளர்களும், செவிலியர்களும், பரிசோதனைகள் செய்யும் உதவியாளர்களும், மருந்து வழங்கும் பார்மஸிஸ்டுகளும் அரசாங்க சுகாதார ஊழியர்களும், காவலர்களும், ஆம்புலன்ஸ் வண்டி ஓட்டுனர்களும், இறுதிப் பயண வாகனத்தை ஓட்டுபவர்களும் முதல் இடத்தில் இருக்கின்றனர்.





இவர்கள் யாவரும் இல்லாத ஒரு உலகத்தை நினைத்துப் பாருங்கள். புரியும் உங்களுக்கு அவர்களின் அமைதியான ஆனால் அழுத்தமான சேவை.

இந்த சூழலில் நாம் கேள்விப் படும் சில நிகழ்ச்சிகள் நம்மை வருத்தத்தில் ஆழ்த்துகின்றன. கோவிட்-19 நோயைக் குணப்படுத்தப் பாடு படும் மருத்துவர்களை அவர்கள் வீடு அமைந்துள்ள காலனிக்குள்ளேயே அனுமதியாமல் குழப்பம் விளைவித்தது மிகவும் துக்ககரமான ஒரு செயல். அந்த மருத்துவர்களுக்கு தெரியாததையா நாம் அறிந்திருக்கின்றோம்? தெரியாததைப் பற்றிய பயத்தில்
தெரிந்தவர்களை ஒதுக்குவது கொடுமை. அதே போல், சுகாதாரத் தொழிலாளர்களை தரக்குறைவாக பேசுவது, நடத்துவது யாவையும் கண்டிக்கப் பட வேண்டிய ஒன்றாகும். விட்டால் அவர்களும் தங்கள் குடும்பங்களுடன் நிம்மதியாக பாதுகாப்பாக வீட்டிலேயே இருக்கத் தயார். அவர்களுடைய பணி நின்று விடும். அவ்வளவுதான்.

வீட்டில் வேலை புரியும் பணியாளர்களுக்கும், ஊர்தி ஓட்டுனர்களுக்கும், தோட்டக்காரர்களுக்கும் பல முதலாளிகள் இரண்டு மாதமாக ஊதியமே கொடுக்கவில்லை என்றும் காதுவழி செய்தியாக வருகின்றன. நாம் மூன்று வேளைகள் வயிறு நிறைய சாப்பிடும் வரம் பெற்றுள்ளோம். மகிழ்ச்சி. அதில் சிறு பங்கை அவர்களுடைய ஊதியத்திற்கு செலவிட்டால், நாம் உயர்வோமேயன்றி தாழ மாட்டோம்.

என்று இவ்வுலகம் எப்படி திரும்பும் என்று நாம் அறியோம். இந்த ஒரு நோயின் தாக்கத்திற்கே இந்த பாடு படுகின்றோம். நாளை என்ன நடக்கும் என்பதை யார் அறிவார்? கீழே இருந்தவர் மேலே வரலாம். மேலே இருந்தவர் கீழே இறங்கலாம். அதுதான் இயற்கையின் சீற்றம் என்பது. ஆகவே இதை கொண்டு என்றுமே நாம் நல்லது செய்தால், நமக்கும் நல்லது வந்து சேரும்.

ஏன் இவை யாவையும் கூறுகின்றேன் என்றால் நமக்கு வைத்தியம் பார்க்கும் தமிழக மருத்துவர்கள் அனைவரும் சேர்ந்து தங்கள் இடைவிடா பணியின் பளுவின் நடுவில் நாம் சோம்பக் கூடாது, தளர்ந்து விடக் கூடாது என்ற எண்ணத்தில் ஒரு அழகான டேன்ஸ் வீடியோவைத் தயாரித்து வலைத் தளத்தில் வெளியிட்டிருக்கின்றார்கள். அவர்களின் மேலோங்கிய எண்ணத்தின் சிறப்பை உணருங்கள்.
அந்த டேன்ஸ் வீடியோவிற்கு “Tamil Nadu doctors beat Covid-19 Blues” என்று பெயரிட்டு கலக்கியுள்ளார்கள். அதை நான் இக்கட்டுரையுடன் இணைத்திருக்கின்றேன்.

நீங்கள் யாவரும் அதை பார்த்து மகிழ்ந்து விட்டு பின்னர் உங்கள் நண்பர்களுக்கும் உறவினருக்கும் அனுப்பி மகிழுங்கள். யூட்யூபில் சென்று “like” கொடுத்து அவர்களை உற்சாகப் படுத்துங்கள்.

கோவிட்-19 என்பது ஒரு கொடிய நோய். ஆமோதிக்கின்றேன்.
அதிலிருந்து நம்மை காக்கப் பாடு படும் இம்மருத்துவர்கள் நமக்கு கடவுளின் பிரதிபலிப்பாகத் தெரியட்டும்.

அவ்வீரர்களான இத்தமிழ் நாட்டின் உழைக்கும் மருத்துவர்களுக்கு உகந்த வீர வணக்கங்களை நான் இக்கட்டுரை வழியே அர்ப்பணிக்க விழைகிறேன்.

திருவள்ளுவரின் குறள்படி,

“நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது அன்றே மறப்பது நன்று”.

நாம் நல்லதையும் நன்றி கூற வேண்டியதையும் கொண்டாடுவோம்.
நன்றல்லாதவைகளை எட்டத் தள்ளி விடுவோம்.

================================